# உழவர்களது உற்பத்தி அதிகமாக - வேளாண்மையில் நவீன தொழில்நுட்ப அறிவு பயன்படுத்தப்பட வேண்டும்!

## முதல்வர் உரை! ... முதல் பக்கத் தொடர்ச்சி

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், உழவர் சந்தைகள் மற்றும் விளை பொருட்களை மதிப்புக்கூட்டத் தேவையான கட்டமைப்பு வசதிகளையும் உழவர்களுக்கு வழங்கி வருகிறது.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களைத் தொடர்ந்து நமது அரசு ஊக்கப்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் தற்போது ஆயிரத்துக்கும் மேற்பட்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனங் கள் செயல்பட்டு வருகின்றன.

**புதிய அரசு வேளாண்மைக் கல்லூரிகள்!**

கடந்த இரண்டு ஆண்டுகளில், 157 மின்னணு தேசிய வேளாண் சந்தைகளில் ஆறு இலட்சத்து 50 ஆயிரம் உழவர்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

கரூர், நாகப்பட்டினம், சிவகங்கை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் மூன்று புதிய அரசு வேளாண்மைக் கல்லூரிகளும், ஒரு தோட்டக்கலை கல்லூரியும் 40 கோடி ரூபாய் மதிப்பில் துவங்கப்பட்டுள்ளன.

ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் புதிய மஞ்சள் ஆராய்ச்சி மையம் நிறுவ ப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் அங்கக வேளாண்மைத் துறையானது, இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையமாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

கழக அரசு அமைந்தபிறகு முதலில் ஒரு லட்சம் மின் இணைப்புகளை இலவசமாகக் கொடுத்தோம். பின்னர் கூடுதலாக 50 ஆயிரம் மின் இணைப்புகளைக் கொடுத்தோம். இப்போது மேலும் 50 ஆயிரம் மின் இணைப்புகளை வழங்குகிறோம்.

உழவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தை 1990ஆம் ஆண்டு தொடங்கி வைத்தவர் அன்றைக்கு முதல்வராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். இந்த முப்பதாண்டு காலத்திலும் - எல்லாக் காலத்திலும் உணவுப் பொருள் விளைவித்து தமிழ்நாட்டு வேளாண் பெருங்குடி மக்கள் வளம் பெற தலைவர் கலைஞர் அவர்கள்தான் அன்றும் இன்றும் என்றும் காரண கர்த்தாவாக அமைந்திருக்கிறார்.

கடந்த பத்தாண்டு காலம் தமிழ்நாட்டை ஒரு கட்சி ஆண்டது. பத்து ஆண்டுகாலத்தில் மொத்தமே 2 லட்சத்து 20 ஆயிரம் வேளாண் மின் இணைப்புகள் மட்டும்தான் அவர்களால் வழங்கப்பட்டன. ஆனால் நாம் இரண்டு ஆண்டுகாலத்தில் 1 லட்சத்து 50 ஆயிரம் இணைப்புகளை வழங்கி இருக்கிறோம்.

**சென்னையில்**
**'வேளாண் வணிகத் திருவிழா!'**

"சொன்னதைச் செய்வோம்!

செய்வதைச் சொல்வோம்!" இது தலைவர் கலைஞரின் முழக்கம்!

"சொல்லாததையும் செய்வோம்!

சொல்லாமலும் செய்வோம்!" இது எனது முழக்கம்.

அந்த வரிசையில்தான் சொல்லாமல் செய்து காட்டி இருக்கிறோம்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான, 'வேளாண் வணிகத் திருவிழா'வை சென்னையில் தொடங்கி வைத்தேன். இப்போது 'வேளாண் சங்கமத்தை' இங்கே இந்த திருச்சியில் தொடங்கி வைத்திருக்கிறேன்.

இயந்திரங்கள் - தொழிற்சாலைகள் - துணி நூல்கள் ஆகியவற்றுக்காகக் கண்காட்சிகள் நடத்துவதைப் போல வேளாண்மைக்கு கண்காட்சி நடத்துவதும் மிக மிக அவசியமானது. வேளாண்மைத் துறையானது அதிக மான அளவுக்கு வளர்ந்து வருகிறது என்பதன் அடையாளமாகவும் இதுபோன்ற கண்காட்சிகள் மூலமாக நாம் சொல்லலாம்.

நவீன தொழில்நுட்பங்கள் புதிய ரகங்கள் - வேளாண்மை இயந்திரங்கள் மதிப்புக் கூட்டும் தொழில் நுட்பங்கள் - ஏராளமாக வந்து கொண்டே இருக்கின்றன. இதுபற்றிய அடிப்படை தகவல்களை உழவர்களுக்கும், பொது மக்களுக்கும், வேளாண் கல்லூரி மாணவர்களுக்கும் அறிமுகம் செய்தாக வேண்டும். அதற்காகத்தான் இதுபோன்ற கண்காட்சிகள் அவசியமாகின்றன.

**வேளாண்மையில் நவீன**
**தொழில்நுட்ப அறிவு தேவை!**

உழவர்களது உற்பத்தி அதிகமாக வேண்டுமானால் - அவர்களது உற்பத்திப் பொருள்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டுமானால், வேளாண்மையில் நவீன தொழில்நுட்ப அறிவு பயன்படுத்தப்பட வேண்டும்!

★ உயர்ந்த விளைச்சல் தரவல்ல புதிய ரகங்கள் -

பாரம்பர்ய நெல் ரகங்கள்

★ வருமானத்தைப் பெருக்க நவீன தொழில்நுட்பங்கள்

★ உத்திகள்

★ நவீன வேளாண் இயந்திரங்கள்

★ சூரிய சக்தி மூலமாக இயங்கும் கருவிகள்

★ செயல்விளக்கங்கள்

★ தொழில் நுட்பங்கள் - போன்றவைகளை உழவர்களுக்கு ஊட்டுவதற்கு இது போன்ற சங்கமங்கள் மிக மிகத் தேவை!

தமிழ்நாடு வேளாண்துறை மட்டுமல்லாமல் மற்ற துறைகளும் இதில் பங்கெடுத்துள்ளது. ஒன்றியத் துறைகளும் வருகை தந்துள்ளன. வாரியங்கள் -பல்கலைக்கழகங்கள்- தனியார் நிறுவனங்களும் வருகை தந்துள்ளன. இதுவே மிகப்பெரிய சங்கமமாக அமைந் துள்ளது. இத்தகைய கூட்டுறவு முயற்சிகள் அனைத்துத் துறைகளிலும் தேவைப்படுகிறது.

**லாபம் தரும்**
**தொழிலாக**
**வேளாண்மை உயர**
**வேண்டும்!**

வேளாண்மை என்பது வாழ்க்கையாக பண்பாடாக இருந்தாலும் அது லாபம் தரும் தொழிலாக முழுமையாக இன்னும் மாறவில்லை. அப்படி அது உயர்த்தப்பட வேண்டும்.

உழவர்கள் உற்பத்தியாளர்களாக மட்டும் காலமெல்லாம் இருந்துவிடக் கூடாது. அவர்களே விற்பனையாளர்களாக மாற வேண்டும் என்ற உன்னதமான நோக்கத்துடன்தான் உழவர் சந்தைகளை தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அமைத்துக் கொடுத்தார்கள்.

**உழவர்களுக்கான நமது**
**மாபெரும் முன்னெடுப்பு!**

இதன் அடுத்தகட்டமாக, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை நமது ஆட்சிக்காலத்தில் உருவாக்கி இருக்கிறோம். இத்தகைய நிறுவனங்களுக்கு மூலதன உதவியும் கடன் உத்தரவாதமும் தரப்பட்டுள்ளது. இவர்களது உற்பத்தி பொருட்கள் மாநகராட்சி அங்காடிகளில் விற்பனை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. கூட்டமைப்பும் உருவாக்கப் பட்டுள்ளது. வேளாண்துறையில்உழவர்களுக்காகச் செய்யப்பட்ட மாபெரும் முன்னெடுப்பு இது!

வேளாண்மை என்பது நிலம் இருப்பவர்கள் மட்டும் பார்க்கும் தொழிலாக இல்லாமல், விரும்பியவர் அனைவரும் பார்க்க முன்வரும் தொழிலாக மாற வேண்டும். இன்றைக்கு நிலத்தை விட அதிக மதிப்பு கொண்டது ஏதுமில்லை. அத்தகைய நிலத்தை வைத்திருக்கும் உழவர்களை மகிழ்ச்சிக்குரியவர்களாக மாற்ற வேண்டும்.

உழவர்களுக்கு தொழில்நுட்பம் தெரிந்திருக்க வேண்டும். அதிகாரிகளுக்கு வேளாண்மை தெரிந்திருக்க வேண்டும். இவை இரண்டும் ஒருங்கிணைக்கப்பட்டால், வேளாண்மை என்பது வர்த்தகத் தொழிலாக மாறும். அதற்கு இதுபோன்ற கண்காட்சிகள் அடித்தளம் அமைக்கும்.

இதுபோன்ற கண்காட்சிகளைத் தொடர்ந்து நடத்துங்கள். அனைத்து மாவட்டங்களுக்கும் எடுத்துச் செல்லுங்கள். வேளாண் அறிவு என்பது உழவர்களுக்கு மட்டுமல்ல, மற்ற அனைவரும் பெற்றாக வேண்டும்.

**சிறப்புத் தொகுப்பு பெறுவதற்கான**
**இறுதி நாள் நீட்டிப்பு!**

நேற்று நான் திருச்சிக்கு வந்தபோது, செய்தித்தாளில் வந்த ஒரு செய்தியைப் பார்த்து இந்தத் துறையினுடைய அதிகாரிகளையும், அமைச்சரையும் அழைத்து அது பற்றி கேட்டேன். அதாவது, இந்த ஆண்டு சிறப்புத் தொகுப்பு பெறுவதற்கான இறுதி நாளை ஆகஸ்ட் 15 வரை நீட்டித்துத் தரவேண்டும் என்று டெல்டா மாவட்ட விவசாயிகள் கோரிக்கை அரசிடம் வைத்திருப்பதாக ஒரு செய்தியைப் பார்த்தேன். நான் அவர்களோடு கலந்து பேசி அதை உடனடியாக அரசு ஏற்றுக்கொண்டு, ரூபாய் 75 கோடி மதிப்பிலான குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டத்தை பெறுவதற்கான இறுதி நாள் ஆகஸ்ட் 15 வரை நீட்டிக்கப்படும் என்று மகிழ்ச்சியான செய்தியை இந்த விழாவின் மூலமாக நம்முடைய உழவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதில் பங்கேற்று உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்காக மீண்டும் என்னுடைய மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### சீர்மிகு திட்டத்தின் கீழ் ரூ.133.56 கோடியில் கட்டப்பட்ட

# தஞ்சாவூர் மாநகராட்சியில் புதிய கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

தஞ்சை, ஜூலை 29 -

சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாநகராட்சியில் ரூ.133.56 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.07.2023) தஞ்சாவூரில் நடைபெற்ற விழாவில், சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், தஞ்சாவூர் மாநகராட்சியில் 133 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாநாட்டு மையக் கட்டடம், ஆம்னி பேருந்து நிலையம், சூரியஒளி மின்நிலையம், மேம்படுத்தப்பட்ட குளங்கள், புதிய பூங்கா, வணிக வளாகம், மருத்துவமனைகளில் நோயாளிகளுடன் உடனிருப்போர் தங்குமிடங்கள் போன்ற கட்டடங்களை திறந்து வைத்தார்.

தஞ்சாவூர் மாநகராட்சியின் சார்பில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ்,

தஞ்சாவூர் மாநகராட்சியில் பல்வேறு கருத்தரங்கம், மாநாடு, கண்காட்சி, கலந்தாய்வுகள் போன்றவை நடத்துவதற்கு ஏதுவாக 6.4 ஏக்கர் நிலப்பரப்பில், 13,076 சதுர மீட்டர் கட்டட பரப்பளவில், அடித்தளம் மற்றும் முதல் தளத்துடன், கலந்தாய்வு மற்றும் கருத்தரங்கு அறைகளுடன், 1500 இருக்கைகள் கொண்ட 61 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாநாட்டு மையக் கட்டடம்;

தஞ்சாவூரில் ஆம்னி பேருந்துகளின் நிறுத்தங்களை ஒழுங்குப்படுத்துவதற்காக 5400 சதுர மீட்டர் பரப்பளவில், தரை மற்றும் முதல் தளத்துடன் கடைகள், பயண அலுவலகம், கழிப்பறைகள், குடிநீர் வசதி, வாகனங்கள் நிறுத்துமிடம் உள்ளிட்ட வசதிகளுடன் 25 பேருந்துகள் நிற்கும் வகையில் 10 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆம்னி பேருந்து நிலையம்;

தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட பள்ளியக்ரஹாரம், கவாடிக்கார தெரு, குறிஞ்சி தெரு, பிள்ளையார் கோவில் தெரு, சின்னக்கடை தெரு, கௌராஷ்டிரா தெரு, நீலகிரி, கூட்டுறவு காலனி, புதுப்பட்டினம், கரந்தை, ராஜப்பா நகர், ஹசிங் யூனிட், அண்ணா நகர், தென்கீழ் அலங்கம் ஆகிய இடங்களில் உள்ள 14 மாநகராட்சி பள்ளிகளில் தொடுதிரை தொலைக்காட்சிகள், கணினிகள், குளிர்சாதன வசதிகள், சிசிடிவி கேமராக்கள் போன்ற வசதிகளுடன் 7 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் சீர்மிகு பள்ளிகளாக மாற்றியமைக்கப்பட்ட பணிகள்;

மாநகராட்சிக்கு சொந்தமான பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள சிராஜிதீன் நகர் பகுதியில் நாள் ஒன்றுக்கு சுமார் 12,500 யூனிட் மின் உற்பத்தி செய்திடும் வகையில் 15 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட 3 MWP சூரியஒளி மின்நிலையம்;

அருளானந்த நகர் பகுதியில் 11 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதப் பூங்கா (STEM Park); மூன்று பகுதிகளாக கட்டப்பட்டுள்ள கடைகள், வாகன நிறுத்துமிடம், மின்தூக்கி, குளிர்சாதன வசதி, சுற்றுச்சுவர் உள்ளிட்ட வசதிகளுடன் 15 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட காந்திஜி வணிக வளாகம்;

கரந்தை பகுதியில் உள்ள கருணாசுவாமி கோவிலில் உள்ள குளத்தை சுற்றி நான்கு திசைகளிலும் உள்ள கரைகளை சீரமைத்து, குளத்திற்கு அருகில் உள்ள வடவாறு ஆற்றில் இருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு கால்வாய் அமைத்து, பேவர் பிளாக் நடைபாதை, இருக்கைகள், கைப்பிடிகள் உள்ளிட்ட வசதிகளுடன் 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட கருணாசுவாமி குளம்;

கவாஸ்காரத் தெருவில் உள்ள அழகி குளத்தைச் சுற்றி நான்கு திசைகளிலும் உள்ள கரைகளை சீரமைத்து, சுற்றுச்சுவர், பேவர் பிளாக் நடைபாதை, குழந்தைகள் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள், இருக்கைகள் உள்ளிட்ட வசதிகளுடன் 1 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட அழகிகுளம்;

தஞ்சாவூர் கீழவாசல் பகுதியில் உள்ள சரபோஜி மார்க்கெட் அருகில் 9483 சதுர அடி கட்டட பரப்பளவில், தரை தளத்தில் 16 கடைகள், முதல் தளத்தில் 27 கடைகள், சிசிடிவி கேமராக்கள் மற்றும் கழிப்பறை வசதிகளுடன் 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அறிஞர் அண்ணா வணிக வளாகம்;

தேசிய நகர்ப்புற வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அரசு இராஜா மிராசுதார் மருத்துவமனையில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நோயாளிகளுடன் உடனிருப்போர் தங்குமிடம், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புற்றுநோய் பிரிவு பகுதியில் நோயாளிகளுடன் உடனிருப்போர் தங்குமிடம், 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தீப்புண் வார்டு பகுதியில் நோயாளிகளுடன் உடனிருப்போர் தங்குமிடம்; என மொத்தம் 133 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மைஉழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண். இராமநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ. ராசா, எஸ்.எஸ். பழனிமாணிக்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி. நீலமேகம், துரை. சந்திரசேகரன், துணை மேயர் திருமதி அஞ்சுகம் பூபதி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், நகராட்சி நிர்வாக இயக்குநர் எஸ். சிவராசு, இ.ஆ.ப., தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் கே. சரவணகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### நாமக்கல் மேற்கு மாவட்டம்

# பள்ளிபாளையம் அ.தி.மு.க. இளைஞரணி நிர்வாகிகள் கழகத்தில் இணைந்தனர்!

## எஸ்.எம்.மதுரா செந்தில் - மா.மதிவேந்தன் முன்னிலை!

*நாமக்கல், ஜூலை 29 -*

*நாமக்கல் மேற்கு மாவட்டம் பள்ளிபாளையம் நகர கழகச் செயலாளர் அ.குமார், 17 வது வார்டு எஸ் வீரப்பன் ஆகியோர் ஏற்பாட்டில் பள்ளிபாளையம் அ.தி.மு.க. இளைஞரணி நகர செயலாளர் வசந்தகுமார், நகர பொறுப்பாளர் சரவணகுமார், பொருளாளர் தர்மலிங்கம் ஆகியோர் தலைமையில் வார்டு செயலாளர்கள் சசிகுமார், கோவிந்தராஜ், பூபதி,*

*இளைஞரணி துணை செயலாளர் கண்ணன், ரவி, ரமேஷ், காளிதாசன், கனகதான், முருகேசன், சரவணன், கோபால், சார்லஸ், மிதுன், பூபதி, மோகன், விஜய்ஆனந்த், தமிழ்செல்வன், செல்வம், லதா சரவணகுமார், தங்கராஜ், கணேசன் உள்ளிட்ட 50 க்கும் மேற்பட்ட அ.தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில், தமிழ்நாடு வனத்துறை அமைச்சர் மருத்துவர்மா.மதிவேந்தன் ஆகியோர் முன்னிலையில் அ.தி.மு.க வில் இருந்து விலகி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.*

*மேலும் தேசிய மாணவர் அமைப்பு மாநில இணைச் செயலாளர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் டி.கே.பிரகதீஷ், வேலூர் நகர செயலாளர் கே.நவீன், செயற்குழு உறுப்பினர் ஹரிஷ், ராகவேந்திரா, வினிஷ், ஜனா, சூர்யா, மொளி, வல்லரசு, சூர்யா, இளவரசன் ஆகியோரும் கழகத்தில் இணைந்தனர்.*

*கழகத்தில் இணைந்தவர்களை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் ஆகியோர் சால்வை அணிவித்து வரவேற்றனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை உள்ளிட்ட நிர்வாகிகள் செயலாளர் மயில்சாமி உடன் இருந்தனர்.*



**சாதியை எதிர்த்து**
**போராடுங்கள் ; அது**
**ஜனநாயகத்திற்கு எதிரி**
**என்பதால்!**
**மூட நம்பிக்கையை**
**எதிர்த்துப் போராடுங்கள்;**
**அது அறிவியலுக்கு எதிரி**
**என்பதால் !**
**ஆதிக்கத்தை எதிர்த்துப்**
**போராடுங்கள்; அது**
**சுதந்திரம் சமத்துவம்**
**சகோதரத்துவத்திற்கு**
**எதிரி என்பதால் !**

**...பேரறிஞர் அண்ணா...**

---

### பாவலர் க.மீனாட்சி சுந்தரம் துணைவியார்

# திருமதி சேது அம்மாள் மறைவு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை, ஜூலை 29

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றப் பொதுச் செயலாளர் மறைந்த பாவலர் க.மீனாட்சி சுந்தரம் அவர்களின் துணைவியார் திருமதி சேது அம்மாள் (வயது 89) நேற்று முன்தினம் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவலறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அவரது குடும்பத்தாருக்குச் செய்தி அனுப்பியுள்ளார்.



நாடாளுமன்றத்தில் மணிப்பூர் விவகாரம் குறித்து பிரதமர் மோடி அவர்கள் விளக்கம் அளிக்காததைக் கண்டித்து மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி என்.சிவா, மக்களவை கழகக் குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி மற்றும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருப்பு உடை அணிந்து நாடாளுமன்றக் கூட்டத்தில் பங்கேற்றிட வருகை தந்தனர்.